# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2268/89 - 2022 පෙබරවාරි මස 25 වැනි සිකුරාදා - 2022.02.25

*2268/89 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/1978* (X) *(அ)*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும்* PV *66705 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டுள்ளதுமான காட்சு* (KAATSU) *- ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்னோலொஜி டிறெயினிங் சென்ரர் (பிறைவேட்) லிமிடெட்* (KIU) *தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின்கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதிய 2196/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான* II *ஐ, அதற்கான நிரல்* I *இலும் மற்றும் நிரல்* II *இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படும் "தாதியியலில் தத்துவவியல் முதுமாணி" என்னும் பதிவை உடனடுத்து இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய, அதற்கான அட்டவணை* II *இன் முறையே நிரல்கள்* I *மற்றும்* II *இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன்மூலமும் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்:-*

**அட்டவணை I**

*நிபந்தனைகள்*

*1.* *காட்சு* (KAATSU) *- ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்னோலொஜி டிறெயினிங் சென்ரர் (பிறைவேட்) லிமிட்டெட்* (KIU) *ஆனது, மென்பொருள் பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு, கணினி வலையமைப்புகள் மற்றும் இணையவெளிப் பாதுகாப்பில் விஞ்ஞான இளமாணி சிறப்பு மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமையில் விஞ்ஞான இளமாணி சிறப்பு* (SLQF *மட்டம் 6) என்பன தொடர்பில் இதற்கான அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துடன் தொடர்புடைய பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்:-*


1A - PG 5759 — 510 (2022/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(அ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் பௌதிக விஞ்ஞானம் என்ற விடயத்துறையில் மூன்று (3) சாதாரணச் சித்திகள் ("S") அல்லது அதற்குச் சமமான தகைமை; அல்லது

(ஆ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் ஒரேதடவையில் ஏதேனும் விடயத்துறையில் மூன்று (3) சாதாரணச் சித்திகள் ("S") அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக் கற்கைநெறியொன்றுடன் அதற்குச் சமமான தகைமை.

2. காட்சு (KAATSU) - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்னோலொஜி டிறெயினிங் சென்ரர் (பிறைவெட்) லிமிடெட் (KIU) ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து (05) ஆண்டு மீள்பரிசீலனைக்கமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டங்களுக்கான சுருக்கீடுகள் |
|---|---|
| மென்பொருள் பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பீஎஸ்சீ (சிறப்பு) மென்பொருள் பொறியியல் |
| கணினி வலையமைப்புகள் மற்றும் இணையவெளிப் பாதுகாப்பில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பீஎஸ்சீ (சிறப்பு) கணினி வலையமைப்புகள் மற்றும் இணையவெளிப் பாதுகாப்பு |
| முகாமைத்துவத் தகவல் முறைமையில் விஞ்ஞான இளமானி சிறப்பு | பீஎஸ்சீ (சிறப்பு) முகாமைத்துவத் தகவல் முறைமை |

**தினேஷ் குணவர்த்தன,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2022, பெப்புருவரி 23.

EOG 02-0661